மக்கள் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். அதேபோல் இங்கு தொழிற்துறையில் பின்தங்கியிருக்கும் படித்து வேலையில்லாமல் இருக்கும் அந்தப் பட்டதாரிகளுக்கு ஒரு வேலைவாய்ப்பு கிடைக்கும் முகத்தாண் அதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை கூட்டுறவுத் துறையில் அமைப்பதற்கு குறைந்த அளவில் 25 தகுதியுள்ள தொழில்முனைவர்களாவது உரிய திட்டத்துடன் முன்வந்தால், அதனை நிறுவுவதற்கு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 70, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**70—**

**வேதாரண்யத்தில் பழம் பதப்படுத்தும் மையம் அமைத்தல்**

***22766—திரு. பி. வி. இராஜேந்திரன்:***

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

800 ஹெக்டேர் மா, 330 ஹெக்டேர் முந்திரி மற்றும் பழவகைகள் அதிகளவு விளையும் வேதாரண்யம் பகுதியில் பழம் பதப்படுத்தும் மையம் (ஊட்டியில் உள்ளது போல்) அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் பழப்பதனிடும் மையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 'புட் ப்ராசசிங்கில்' தமிழகம் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு சுமார் 500 கோடி ரூபாய் பெருமானமுள்ள வேளாண்மைப் பொருட்கள், குறிப்பாக அழுகுகின்ற காய்கறிகள், பழவகைகள் அழுகி வீணாகிப் போய்க் கொண்டிருக்கின்றன.. குறிப்பாக இந்த 'புட் ப்ராசசிங்கைப்' பொறுத்தவரையில் மைசூரில் இருக்கிற CFTRI (Central Food Technological Research Institute) மிகப் பெரிய அளவில் புதிய கண்டுபிடிப்புகளை எல்லாம் இயற்றிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக மிக அதிகமாக தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று, அல்லது செல்ல முடியாமல் இடையிலே அழிந்து போகின்ற தக்காளி, மாங்காய் போன்ற இனங்களை எல்லாம் அதிலிருந்து ஜூஸ் போன்றவற்றை எல்லாம்

1994 மார்ச் 22]

எடுத்து பதப்படுத்துகின்ற முறைகளை எல்லாம் நாம் அவர்களிடமிருந்து பெற்று, இங்கேயிருக்கின்ற விவசாயிகளுக்குச் சொன்னால்கூட, தனியார் துறை மூலமாக இப்படிப்பட்ட 'புட் ப்ராசசிங்' அமைப்புகள், இன்டஸ்டிரீஸ் வருவதற்கு மிகப் பெரிய அளவில் வாய்ப்பு இருக்கிறது. மைய அரசிலே கூட 'புட் ப்ராசசிங்' யுனிட்டுக்கு என்று ஒரு தனி அமைச்சகம்கூட இருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதனை ஊக்குவிப்பதற்கு அரசு நேரடியான நடவடிக்கைகளில் தொழிற் சாலைகள் மூலமாக இறங்கவில்லை என்றாலும், தனியார் துறையை ஊக்குவிப்பதற்கு வேளாண்மைத் துறை என்ன செய்யும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள்தான் கேட்ட கேள்வியைத் திரும்ப ஒரு முறை படிக்க வேண்டுமாய் உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். அவர் கேட்டிருக்கக் கூடிய வினா வேதாரண்யம் பகுதியில் பழம் பதனிடும் தொழில் நிறுவனம் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வி கேட்டிருந்தார்கள். அதற்குரிய பதில்தான் என்னிடத்திலே இருந்தது. இதுபோன்ற பரிசீலனை அரசுக்கு இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் தனியாக ஒரு கேள்வியைப் போடுவார்கள் என்று சொன்னால், அதற்குரிய அனைத்துப் பதிலையும் அரசுத் துறையிலிருந்து திரட்டி, இந்த அவையிலே பதில் அளிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வகையில் நான் கேட்ட கேள்வி சம்பந்தப்படாத கேள்வி என்று எனக்கே விளங்கவில்லை. அரசு ஆரம்பிக்கவேண்டுமென்ற கேள்வி இருந்தாலும், இன்றைக்கு அரசு எல்லாவற்றுக்கும் பண முதலீடு செய்ய முடியாது. எல்லாவற்றையுமே அரசுதான் செய்யவேண்டுமென்று மக்களும் எதிர்பார்க்கவில்லை. இன்றைக்கு பிரைவேட் செக்டார் அல்லது கோ-ஆப்பரேடிவ் செக்டார் ஊக்குவிக்கப்படவேண்டும். ஆகவே பிரைவேட் செக்ட்டாரிலே ஆரம்பிப்பதற்காகவாவது நீங்கள் ஊக்குவிக்கின்ற திட்டங்களை வைத்திருக்கின்றீர்களா? அல்லது மைய அரசாங்கத் தினுடைய சி.எப்.டி.ஆர்.ஐ. போன்ற நிறுவனங்களோடு நமக்கு இருக்கின்ற ஒருங்கிணைப்பு—'கோ-ஆர்டினேஷன்' நன்றாக இருக்கிறதா? தனியார் துறையை ஊக்குவிக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம். வேளாண்மைத் துறை அமைச்சகத்தினுடைய முழு கவனத்திலும் 'ஹார்டிகல்சர்' இருக்கிறது. இன்றைக்குப் பல கோடி ரூபாய் மதிப்புள்ள பழங்கள், காய்கறிகள் எல்லாம் வீணாகிப் போய்க்கொண்டிருப்பது அமைச்சகத் திற்குத் தெரியாமல் இருக்கமுடியாது. அதனைப் பதப்படுத்துவதற்கான திட்டம் இருக்கிறதா, இல்லையா என்பதற்கு வேறு

ஒரு தனிக் கேள்வி தேவையில்லை என்று நினைக்கிறேன். எனவே அதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சரவர்கள் வழங்குவார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தமிழகத்திலே விளைந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவிற்கு உள்ள தோட்டக்கலைப் பயிர்களான காய்கறிகள், பழங்கள் இவற்றை ஏற்றுமதி செய்வதற்கும், அந்தப் பழங்களைப் பதப்படுத்துவதற்குரிய தொழில் நிறுவனங்களை அமைக்கவேண்டும் என்று இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை வருகின்றபோது அது பற்றிய அனைத்து விவரங்களும் அளிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 71, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**71—**

**கல்வராயன் மலையருகில் கிராபைட் தொழிற்சாலை அமைத்தல்**

***15241*—திரு. சி. இராமசுவாமி:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கல்வராயன் மலையருகில் கிராபைட் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

*மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலைப் பகுதியில் கிராபைட் படிவங்கள் இல்லை. எனவே, அப்பகுதியில் கிராபைட் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10.45*

*திரு. சி. இராமசுவாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் கிராபைட் தொழிற்சாலை அமைக்க அனைத்து சாத்திய கூறுகளும் உள்ளன. மலை வாழ் மக்கள் நலன் கருதியும், படித்த இளைஞர்களில் வேலைவாய்ப்பு நலன் கருதியும் மேற்படி தொழிற்சாலையை அங்கே துவங்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.